வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவம் – I | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) "வுல்காத்தா" (வல்கேட்) திருவிவிலியத்திற்காக பயன்படுத்தப்படும் இலத்தீன் சொல்.
1. பிபிளுஸ் 2. அபோகளிப்ஸ் 3. டா பிபிலியா
4. தியோப் னெட்டோஸ் 5. னெட்மா

2) "இணைத்திருமறை நூல்கள்" என்பதன் பொருள்.
1. நூல்களின் தாய் 2. இரண்டாவதாக அங்கீகரிக்கப்பட்டவை.
3. இறை ஏவுதலால் எழுதப்பட்டவை 4. மறைவு நூல்கள்
5. பொது மக்களின் பிரதி

3) திருவிவிலியத்தின் இறுதி நூலாகிய திருவெளிப்பாட்டின் ஆசிரியர் எனக் கருதப்படுபவர்.
1. புனித மத்தேயு 2. புனித லூக்கா 3. புனித மாற்கு
4. புனித யாக்கோபு 5. புனித யோவான்

4) 150ம் ஆண்டளவில் எழுதப்பட்ட "யூதரோடுடனான உரையாடல்" எனும் நூலை எழுதியவர்.
1. புனித ஜெயரோம் 2. புனித ஜஸ்டின் 3. புனித அகுஸ்தினார்
4. புனித யோவான் 5. புனித அத்தனாசியார்

5) எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் இருவர் பெயர்.
1. மோசே, யோசுவா 2. எலியா, எலிசேயு 3. நாத்தான், சாமுவேல்
4. ஒசேயா, ஆமோஸ் 5. காத், அகியாசு

6) "பல் மத வழிபாட்டினர்" என அழைக்கப்பட்டவர்.
1. பரிசேயர் 2. சதுசேயர் 3. சமாரியர்
4. எஸ்சேனியர் 5. செலஸ்தியர்

7) செனத்திரன் சங்கத்தில் உள்ள அங்கத்தவர்கள் எண்ணிக்கை
1. 24 2. 71 3. 70 4. 90 5. 120

8) "பிரிந்திருப்பவர்" எனும் பொருள் கொண்ட இனத்தவர்.
1. பரிசேயர் 2. சதுசேயர் 3. சமாரியர்
4. எஸ்சேனியர் 5. செலஸ்தியர்

9) "சகாவரத்தைப் பெற முயன்றவர்கள்.
1. ஆதாம் ஏவாள் 2. காயினின் பிள்ளைகள் 3. நோவாவின் கால மக்கள்
4. நோவாவின் மக்கள் 5. காயின், ஆபேல்

10) பழைய ஏற்பாட்டில் ஞான இலக்கியத்தில் அடங்கும் இரண்டு நூல்களாவன.
1. யோபு, தொபியாஸ் 2. யூடித், பாரூக் 3. சாலமோனின் ஞானம், யூடித்
4. பாரூக், மக்கபேயர் 5. திருப்பாடல், நீதி மொழிகள்

11) பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்ட சில நூல்கள் அரமேய மொழியில் எழுதப்படக் காரணமாய் அமைந்தது.
1. ஆசீரிய அடிமைத் தனத்தின் போது யூதமக்கள் அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டமை.
2. கிரேக்க பேரரசின் காலத்தில் யூத மக்கள் அரமேய மொழிக்குக் பழக்கப்பட்டமை.
3. உரோமைப் பேரரசின் காலத்தில் யூதமக்கள் அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டமை.

agaram.lk

4. பபிலோனிய அடிமைத் தனத்தின் போது யூதமக்கள் அரமேய மொழிக்கு பழக்கப்பட்டமை.
5. பாரசீக பேரரசு காலத்தில் யூதமக்கள் அரமேய மொழிக்குப் பழக்கப்பட்டமை.

12) அறிவுரையாக அமைந்திருப்பதை விசேட பண்பாகக் கொண்ட மரபு.
1. D மரபு 2. J மரபு 3. E மரபு 4. P மரபு 5. Q மரபு

13) தொடக்க நூலில் எச்சம்பவத்தின் பின்னர் மாமிசம் உண்ணும் அனுமதியை மனிதன் பெறுகின்றான்.
1. காயின் அபேலின் கதையின் பின்
2. ஆதாம் ஏவாளைப் படைத்த பின்
3. படைப்பின் கதையின் பின்
4. வெள்ளப்பெருக்கின் பின்
5. ஆதாம் ஏவாள் பாவம் செய்த பின்

14) குரு மரபிற்குரித்தான வேதாகப் பகுதியில் அமைந்திருப்பது,
1. படைப்பின் முதலாம் கதை
2. படைப்பின் இரண்டாம் கதை
3. காயின் ஆபேல் கதை
4. பாபேல் கோபுரக் கதை
5. நோவாவின் கதை

15) “சின்ன உரோம்” என அழைக்கப்பட்ட கத்தோலிக்க பிரதேசம்.
1. புத்தளம்
2. சிலாபம்
3. மடுக்கோயில்
4. மன்னார்
5. சில்லாலை

16) லண்டன் மறைத்தூதுக் குழுவினர் வேறு எப்பெயரால் அழைக்கப்பட்டனர்.
1. பப்ரிஸ்ற் சபை
2. வெஸ்ஸியன் சபை
3. இரட்சணிய சேனை
4. இலங்கைத் திருச்சபை
5. இலங்கை வேதாகம சங்கம்

17) ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதத்திற்கு வாஸ் அடிகளார் போன்று புரட்டஸ்தாந்து மதத்திற்குரியவர்.
1. யாக்கொமே கொன்சால்வேஸ்
2. சீமான் டீ கொயம்ரா
3. பிரான்சிஸ்கோ
4. ஜோண் த விலா
5. பிலிப் பல்தேயுஸ்

18) செபத்தின் புதையலாக கருதப்படுவது,
1. இணைத்திருமறை நூல்கள்
2. ஞான நூல்கள்
3. திருப்பாடல்கள்
4. பக்திப் பாடல்கள்
5. புகழ்ச்சிப் பாடல்கள்

19) “அவனியில் அமைதி” எனும் சுற்றுமடலை எழுதியவர்.
1. 12ம் பத்திநாதர்
2. 2ம் அருளப்பர், சின்னப்பர்
3. 23ம் அருளப்பர்
4. 10ம் பத்திநாதர்
5. 6ம் சின்னப்பர்

20) இயற்கைக்கும் சூழலுக்கும் அதிபதியாக விளங்குபவர்.
1. மனிதன்
2. யேசுக்கிறிஸ்து
3. படைப்பாளி
4. தூயஆவி
5. ஆதாம்

21) புதிய ஏற்பாட்டில் கூறப்படும் பெந்தக்கோஸ்தே நிகழ்வு பற்றி முன்னறிவித்த இறைவாக்கினர்.
1. சக்கரியா
2. எரேமியா
3. எசாயா
4. யோவேல்
5. எசேக்கியேல்

22) யேசுவின் பெயராலே உயிர்நீத்த முதல் வேதசாட்சி.
1. பெரிய யாக்கோபு
2. ஸ்தேவான்
3. யோவான்
4. பேதுரு
5. யூதாஸ் ஸ்கரியோத்து

23) காசாவுக்கு செல்லும் வழியில் பிலிப்புவினால் திருமுழுக்குப் பெற்றவர்.
1. அனனியா
2. பவுல்
3. எத்தியோப்பிய அண்ணகன்
4. கொர்னேலியு
5. நூற்றுவத் தலைவன்

24) பின்வரும் திருச்சபை, தந்தையருள் “கிரேக்க தந்தை” என அழைக்கப்படுபவர்.
1. அத்தனாசியார்
2. அமிர்த நாதர்
3. அகுஸ்தினார்
4. பெரிய கிரகோரியார்
5. ஜெயரோம்.

25) யூத மக்கள் ஜெருசலேம் கோவிலுக்கான வரியாக செலுத்தியது.
1. ஷெக்கேல் இரண்டு
2. திராக்மா நாணயம் இரண்டு
3. தாலந்து
4. கிரேக்க திராக்மா ஒன்று
5. தினாரி

agaram.lk

26) யூத மக்களால் "இனத்துரோகிகள்" எனக் கருதப்பட்டோர்.
1. சமாரியர் 2. பரிசேயர் 3. வரி தண்டுவோர்
4. மறைநூல் அறிஞர் 5. கள்வர்கள்

27) யேசுவின் காலத்து சமய குழுக்கள் பற்றிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A. "சாதோக்" எனும் குருவின் பரம்பரையில் வந்தவர்கள்.
B. மறுபிறப்பு பற்றிய கருத்தை ஏற்றுக் கொள்ளாதோர்.
C. உடைகளை விசேட விதமாக அணிபவர்கள்.
D. வானதூதர், உயிர்த்தெழுதல் பற்றி நம்பிக்கையுள்ளோர்.
E. வெள்ளை உடை அணிதல்.
மேற்கூறிய கருத்துக்களில் சதுசேயருக்குரிய கருத்தாக அமைவது,
1. B, C 2. D, E 3. C, D 4. A, B 5. A, D

28) திருச்சபையின் ஆரம்பகாலம் எனப்படுவது,
1. முதல் நூற்றாண்டு 2. 1 – 2 நூற்றாண்டு 3. 1 – 3 நூற்றாண்டு
4. 1 – 5 நூற்றாண்டு 5. 1 – 10 நூற்றாண்டு

29) செப்துவாஜிந்தில் நற்செய்தி என்பதற்கு வழங்கப்படும் சொல்லானது,
1. அபோகளிப்ஸ் 2. எவான்சலியோன் 3. தியோப்னெட்டோஸ்
4. கொக்கடேஸ் 5. கொஹேன்

30) புதிய ஏற்பாட்டு நூல்களில் கி.பி 80 – 90 களுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட நூலானது,
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா
4. யோவான் 5. அப்போஸ்தலர் பணி.

31) "மெசியாவின் மறைபொருள்" பற்றி அறிமுகப்படுத்தும் நற்செய்தியாளர்.
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா
4. யோவான் 5. யாக்கோபு

32) புனித பவுலின் மூன்றாவது பயணத்தின் போது அவரோடு பயணத்தோழராகச் சென்றவர்கள்.
1. சீலா, திமோத்தேயு 2. பர்ணபா, யோவான் மாற்கு
3. லூக்கா, திமோத்தேயு 4. திமொத்தேயு, சீலா, தீத்து
5. சீலா, யோவான், மாற்கு

agaram.lk

33) தூய பவுலின் கையினால் எழுதப்பட்ட திருமுகம் அல்லாதது,
1. கலாத்தியர் 2. உரோமையர் 3. பிலிப்பியர்
4. கொரிந்தியர் 5. கொலோசேயர்

34) இலங்கையின் முதலாவது தமிழ் ஆயர்.
1. தியோகுப் பிள்ளை ஆண்டகை. 2. எமலியானுஸ் பிள்ளை ஆண்டகை
3. தோமஸ் பெஞ்சமின் கருதினால் 4. எட்மன் பீரிஸ் ஆண்டகை
5. ஜோண் ஸ்ரீபன் ஆண்டகை

35) மனித மாண்பு மதிக்கப்பட வேண்டுமென்றும் ஏழைகள் பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வுகள் மறைய வேண்டும் என்றும் வலியுறுத்துவது,
1. அவனியில் அமைதி எனும் சுற்றுமடல்
2. கிறிஸ்துவின் மறையுடன் எனும் சுற்றுமடல்
3. அன்னையும் ஆசிரியையும் எனும் சுற்றுமடல்
4. நேரும் நோவாறும் எனும் சுற்றுமடல்
5. குவாத்திர ஜெசிமோ ஆனோ எனும் சுற்றுமடல்

36) அன்பு, பிராமாணிக்கம், ஒருவர் ஒருவர் மீதுள்ள மதிப்பு என்னும் வாக்குறுதிகளின் மூலம் திருமணமான தம்பதிகள் உட்படுவது,
1. நற்செய்தி அறிவிக்கும் பணி வாழ்விற்கு.
2. நல்வாழ்வுக்கும், செபவாழ்வுக்கும்.
3. தலைமைத்துவத்துடன் கூடிய தியாக வாழ்விற்கு.
4. ஒருவர் ஒருவருக்காக தம்மைத் தியாகம் செய்து பரித்தியாக வாழ்வு வாழ்வதற்கு.
5. முறையான கல்வி பெற்று தூய வாழ்க்கை வாழ்வதற்கு.

37) தன் கண் முன்னே உள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாது கண்ணுக்கு புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது எனும் கூற்றுக் குரியவர்.
1. யோவான் 2. யாக்கோபு 3. பவுல் 4. லூக்கா 5. யூதா

38) சமாதானத்திற்காகப் பயன்படும் சொல்லானது,
1. ஷமார் 2. ஷாலோம் 3. ஹனுகா 4. கொஹேன் 5. மம்ளேகெற்

39) திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின் அரச பணிக்கு அழைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவனிடத்தில் இருக்க வேண்டிய பண்பாவது,
1. சிறந்த வாழ்க்கை வாழுதல்.
2. தனது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுதல்.
3. மற்றவர்கள் மதிக்கும் வகையில் வாழுதல்.
4. தனது எதிர்கால நலன் கருதி வாழுதல்.
5. பணிவிடை பெறுவதற்கன்றி பணிவிடை புரிதல்.

40) இறைவன் மனிதனின் தனிமையைப் போக்க துணைவியைக் கொடுத்தார். துணைவி என்பதன் பொருள்.
1. அதிகாரம் செலுத்துபவள் 2. அறிவை பகிர்ந்து கொள்பவள்
3. துணையாக இருப்பவள் 4. உதவுபவள்
5. ஆசீர் வதிப்பவள்

41) கடவுள் மனிதனுக்கு உயிர் மூச்சை அளித்ததன் மூலம் வெளிப்படுத்தப்படும் மனிதனின்,
1. அதிகாரம் 2. உயிர்த்துடிப்பு 3. தாழ்மை 4. மாண்பு 5. அழகு

42) ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பை அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாதது என்னும் அறிவுரையின் படி தனது வாழ்வினால் சான்று பகர்ந்தவர்.
1. புனித சைமன் டொக் 2. புனித அவிலா தெரேசாள்
3. புனித சிலுவை அருளப்பர் 4. புனித வின்சன்டி போல்
5. புனித குழந்தை யேசுவின் திரேசாள்

43) அருளடையாளங்கள் எதுவும் இல்லாத இராணுவத்திற்கு சமனான அமைப்பைக் கொண்ட சபையானது,
1. லூத்தரசன் சபை 2. இரட்சணிய சேனை 3. மெதடிஸ்த சபை
4. அங்கிலிக்கன் சபை 5. தென்னிந்திய திருச்சபை

44) எபேசு திருச்சங்கம் கூட்டப்படுவதற்கு காரணமாய் அமைந்த பேதகம்.
1. ஆரிய பேதகம் 2. நெஸ்தோரிய பேதகம் 3. இயூத்திக்கேய பேதகம்
4. மோனோத்தேலா பேதகம் 5. மனிக்கேய பேதகம்

45) "கெரிசிம் மலை" அமைந்துள்ள இடம்.
1. யூதேயா 2. மோவாபு 3. கலிலேயா
4. சமாரியா 5. எஸ்திரலோன் புல்வெளி

46) முதல் முறையாக சீடர்கள் "கிறிஸ்தவர்" எனும் பெயரைப் பெற்றது.
1. கலிலேயாவில் 2. எபேசில் 3. அந்தியோக்கியாவில்
4. உரோமில் 5. சமாரியாவில்

47) லேவியரல்லாதவர்களை பலி செலுத்துவதற்காக குருக்களாக நியமித்த அரசன்.
1. எரோபவாம் 2. சாலமோன் 3. தாவீது 4. யோசியா 5. செதோக்கியா

48) கத்தோலிக்க திருச்சபையின் மரபு ரீதியான நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்படுபவர்.
1. புனித ஜெரோம் 2. புனித அத்தனாசியார் 3. புனித சிறில்
4. புனித ஜஸ்ரின் 5. புனித பசில்

49) "அப்போலோஜியா" என்பதன் பொருள்.
1. பாதுகாப்பது 2. நன்றி செலுத்துதல் 3. மீட்பு பெறுதல்.
4. மறை சாட்சிகள் 5. துறவற வாழ்வு

50) "மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்கும் வித்தாகும்." இப்பெறுமதி வாய்ந்த கூற்றுக்குரியவர்.
1. புனித ஜெரோம் 2. புனித தெர்த்தூலியன் 3. புனித ஓரிஜின்
4. புனித அகுஸ்தினார் 5. புனித சிறில்

agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | கிறிஸ்தவம் - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

❖ பகுதி I இல் இரு வினாக்களையும், பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1) 1. ஐந்நூலுக்கு கூறப்படும் வேறுபெயர்கள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)
   2. புனித பவுல் தனது கைப்பட எழுதிய திருமுகங்கள் 2 தருக? (04 புள்ளிகள்)
   3. யாவே மரபில் இறைவன் மனிதரைப்போல் சித்தரிக்கப்படுகின்றார் என்பதற்கு மூன்று உதாரணம் தருக. (06 புள்ளிகள்)
   4. புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறும் அன்பு பற்றிய பண்புகளை அடிப்படையாக வைத்து கிறிஸ்தவராகிய நீர் எவ்வாறு செயற்படுவீர் என நான்கு உதாரணம் தருக? (08 புள்ளிகள்)

2) 1. யேசுவின் காலத்தில் காணப்பட்ட சமய குழுக்கள் இரண்டின் பெயர் தருக. (02 புள்ளிகள்)
   2. தொடக்க நூலின் இரண்டு பிரதான பகுதிகள் எவை? (04 புள்ளிகள்)
   3. இலங்கையின் கோட்டை அரசனான புவனேகபாகு போர்த்துக்கேயரிடம் விண்ணப்பித்த கோரிக்கைகள் மூன்று தருக? (06 புள்ளிகள்)
   4. யூத சமுதாயத்தைப் போன்று ஆணாதிக்கம் நிறைந்த உமது சமூகத்தில் பெண்களுக்குரிய சமூக உரிமைகளை பெற்றுக்கொடுக்க நீர் செய்யும் செயற்பாடுகள் 4 தருக. (08 புள்ளிகள்)

agaram.lk

3) 1. திருச்சபையின் ஆரம்பகால திருச்சங்கள் இரண்டினை எழுதுக? (02 புள்ளிகள்)
   2. மேற்கூறிய திருச்சங்கங்களின் தீர்மானத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மறையுண்மைகள் இரண்டு வீதம் தருக. (04 புள்ளிகள்)
   3. 16ம் நூற்றாண்டில் பிரிவினை சபைகளின் தோற்றத்தின் பின்னர் கத்தோலிக்க திருச்சபையில் தோன்றிய புதிய துறவற சபைகள் மூன்று தருக. (06 புள்ளிகள்)
   4. இன்றைய திருச்சபையில் இருந்து மக்கள் பிரிவினைச் சபைகளுக்கு செல்லாதிருக்க நீர் கூறும் ஆலோசனைகள் நான்கு தருக. (08 புள்ளிகள்)

## பகுதி II

4) 1. ஜெருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டதன் காரணத்தினையும் அதன் தீர்மானங்களையும் விளக்குக.
   2. தற்காலத்தில் திருச்சபைக்கு ஏற்படும் சவால்களையும் அவற்றிற்கு நீர் எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வீர் என 5 உதாரணங்கள் தருக. (20 புள்ளிகள்)

5) 1. இறைவாக்கினர்களின் பிரதான மூன்று படிப்பினைகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்கி எழுதுக.
   2. தற்காலத்தில் நன்நெறிமிக்க வாழ்க்கை வாழ எவ்வாறு முயற்சிப்பீர் என 5 உதாரணங்கள் முன்வைக்குக. (20 புள்ளிகள்)

6) 1. யோவான் நற்செய்தி நூலின் இயல்புகளைக் குறிப்பிட்டு அவற்றில் யேசுவின் "நானே" எனும் சுய வெளிப்படுத்தல் கூற்றுக்களை விளக்குக.

2. யேசுவின் நற்செய்தியின் ஒளியில் அவரைப் பின்பற்றி நீர் உமது வாழ்வில் எவ்வாறு பிறருக்கு முன்மாரிதிகையாக வாழ்வீர் என விளக்குக. (20 புள்ளிகள்)

7) 1. ஒல்லாந்தர் காலத்தில் இலங்கை கத்தோலிக்கர்கள் எதிர் கொண்ட துன்பங்களை விளக்குக.

2. தூய ஜோசவ்வாசைப் போன்று நீர் உமது வாழ்க்கையில் சவால்கள் ஏற்படும் போது எவ்வாறு செயற்படுவீர் என விளக்குக? (5 உதாரணம் தருக) (20 புள்ளிகள்)

8) பின்வருவோரில் நால்வர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

1. தாவீது அரசன்
2. துன்புறும் ஊழியன்.
3. யாக்கொமே கொண்சால்வேஸ்
4. திருச்சபை தந்தையர்.
5. மீட்புத் திட்டத்தில் பங்கு கொண்ட பெண்கள்.

agaram.lk